**<u>IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR</u>**

**DEPOSITION OF WITNESS**

**P.W.3**

**O.S No. 48/2012, 156/2016**

| | |
|---|---|
| **Name** | : மாணிக்கம் |
| **Father's Name** | : செங்கோட கவுண்டர் |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 07.07.2026**

**வா.சா.3 முதல் விசாரணை:-**

1) நான் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையில் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். பழனியம்மாள் என்னுடைய காட்டிற்கு வேலைக்கு அந்த காலத்தில் வந்துள்ளார், அதனால் தெரியும். பட்டுதுறை கிராமத்தில் உள்ள முத்துசாமி மூப்பனார் அவர் மகன்கள் அழகுவேல், ஆரோக்கியம், ஆகியோர் செங்கோட கவுண்டரான என் அப்பாவிற்கு விற்றுள்ளார்கள். அந்த சொத்து 1986ல் என் திருமணத்திற்கு பின்னிட்டு வாங்கப்பட்டு அதில் என்னிடம் 50 செண்ட் மட்டும் உள்ளது. மீதம் 90 செண்டை விற்றுவிட்டேன். பக்கத்து காட்டுக்காரரான செல்லம் என்பவருக்கு விற்றுவிட்டேன். முத்துசாமிமூப்பனார் அவர் மகன்கள் அழகுவேல், ஆரோக்கியம், ஆகியோரை எனக்கு தெரியும். சரண்யா என்பவர் ஆரோகியத்தின் தம்பி மகள். சரண்யாவின் அப்பா அழகுவேல் அந்த கிரய பத்திரத்தில் கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார். மேற்படி அசல் கிரய பத்திரத்தை நான் கொண்டு வந்து சமர்ப்பிக்கிறேன். ஆரோக்கியம் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். என் அப்பா செங்கோட கவுண்டர் 2014ல் இறந்தார். மேற்படி அசல் கிரய பத்திரம் மற்றும் வாரிசு

சான்றிதழை அடுத்த வாய்தாவில் சமர்ப்பிக்கிறேன். எனவே ஆவணங்கள் சரிபார்ப்பிற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.07.07 17:43:37 +0530

**Subordinate Judge, Attur.**